# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREE)

## PART III (4TH) EXAMINATION IN BACHELOR OF ECONOMICS – 2010/11

## (AUGUST/SEPT 2014)

## EXE 4073 DEVELOPMENT POSSIBILITIES AND PROSPECT

எல்லா வினாக்களுக்கும் விடை தருக — நேரம் - 03 மணித்தியாலங்கள்

1. (a). "அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் சந்தைத் தோல்வி நிலைமை காணப்படுதல் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தி நிற்கின்றது" ஆராய்க. (08 புள்ளிகள்)

   (b) திட்டமிடலின் ஆறு அடிப்படை குணாதிசயங்களை தருக. (04 புள்ளிகள்)

   (c). குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் தோல்வி அடைவதற்கான அடிப்படைக் காரணங்களை விளக்குக. (08 புள்ளிகள்)

   (மொத்தம் 20புள்ளிகள்)

2. (a). அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிதிசார் துறையானது (Financial sector) வழங்குகின்ற பிரதான பணிகளைக் குறிப்பிடுக. (12 புள்ளிகள்)

   (b). குறைவிருத்தி நாடுகளில் பின்பற்றப்படும் பேரினப் பொருளியல் உறுதிப்பாட்டுக் கொள்கையின் மூன்று குறிக்கோள்களும் எவை? (08 புள்ளிகள்)

   (மொர்த்தம் 20 புள்ளிகள்)

3. (a). குறைவிருத்தி நாடுகளில் மரபு ரீதியாக வரி விதிப்பானது கொண்டிருக்கும் நோக்கங்கள் எவை? (04 புள்ளிகள்)

   (b). அண்மைக்காலமாக குறைவிருத்தி நாடுகள் பாரிய வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை எதிர் கொண்டு வருவதேன்? (04 புள்ளிகள்)

   (c). குறைவிருத்தி நாட்டு அரசாங்கங்களின் நேர்முக மற்றும் மறைமுக வரி ஆதாரங்கள் எவை? அங்கு அரசாங்க வருமானத்தில் பண்டங்கள் மீதான வரிகள் பெரும் பங்கு வகிப்பது ஏன்? அவற்றுக்கு உதாரணம் தந்து விளக்குக. (12 புள்ளிகள்)

   (மொத்தம் 20 புள்ளிகள்)

4. (a). நவ பழம் பொருளியலாளர்களின் தடையற்ற வர்த்தக மாதிரியின்படி சர்வதேச வர்த்தகம் எவ்வாறு நாடுகளின் அபிவிருத்திக்கு உதவ முடியும்? (08 புள்ளிகள்)

(b). குறைவிருத்தி நாடுகள் எதிர் நோக்கும் சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்கான காரணங்களை எடுத்துக்கூறுக. (04 புள்ளிகள்)

(c). குறைவிருத்தி நாடுகளின் ஏற்றுமதி வருமானத்திற்கும், ஏற்றுமதிப் பொருட்களின் விலை சார், வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சிக்கும் இடையேயான தொடர்பினை விளக்குக. (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. (a). குறைவிருத்தி நாடுகளில் பல்தேசக் கம்பனிகளின் செயற்பாடுகளை சுருக்கமாக தருக. (04 புள்ளிகள்)

(b). அபிவிருத்தியடைந்த நாடுகள் ஏன் குறைவிருத்தி நாடுகளுக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்குகின்றன? (08 புள்ளிகள்)

(c). குறைவிருத்தி நாடுகள் ஏன் பணக்கார நாடுகளில் இருந்து வெளிநாட்டு உதவிகளைப் பெறுகின்றன? (08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)